Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2203    ஐப்பசி 29    (14-11-1992)    சனிக்கிழமை    ஓசை 270

## மலேரியாவின் தாக்கம் யாழ். குடாவில் அதிகரிப்பு

யாழ். குடாநாட்டில் மலேரியா நோயின் தாக்கம் சென்ற வருடத்தைவிட நான்கு மடங்காக அதிகரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளதாகவும், நிலைமையைக் கட்டுப்படுத்தாது விட்டால் இன்னும் பெரிய தாக்கத்தை உருவாக்கும் என மலேரிய தடுப்புப்பிரிவு உயர் அதிகாரி தெரிவித்தார். சென்ற வருடம் 7754 மலேரியா நோயாளரும், இதில் மூளைமலேரியாநோயாளர் 837 ஆகஇருந்தது. ஆனால் இந்த வருடம் செப்டெம்பர் மாதம் வரையிலான பகுதியில் மட்டும் 15,023 மலேரிய நோயாளரும் இதில் 2374 மூளை மலேரிய நோயாளரும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். ஆனால் மலேரிய பருவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பிரேமா அரசாங்கத்தை பதவி விலக கோரி

# கடவுளிடம் எதிர்க்கட்சிகள் ஆட்சேப மனு

## கடும் மழையிலும் ஆயிரக் கணக்கானோர் மனித சங்கிலிப் போராட்டத்தில் பங்கு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவைப் பதவிவிலகக் கோரும் மனித சங்கிலிப் போராட்டம் கொட்டும் மழையிலும் கொழும்பில் நேற்று ஆரம்பமானது. எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்த இப்போராட்டத்தில் ஆயிரக்கணக்கில் மககள் கலந்து கொண்டனர். கொழும்பிலுள்ள விகாரை ஒன்றில் இடம் பெற்ற மத வழிபாட்டினை அடுத்து இரத்தினபுரியிலுள்ள 'சமன்' என்னும் தெய்வத்திடம் சமர்ப்பிக்கவென மகஜர் ஒன்று எடுத்துச் செல்லப்படுகின்றது.

சிறிலங்கா அரசு பதவி விலக வேண்டும் என ''சமன்''தெய்வத்திடம் விண்ணப்பித்துக் கொள்வதற்காக இந்தப் போராட்டம் நடத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

''சமன்'' தெய்வத்திடம் சமர்ப்பிப்பதற்கான பிரேமதாசாஅரசாங்கம் மீதான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய சிவப்புக் காகிதத்தில் எழுதப்பட்ட மகஜரை எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோபண்டாரநாயக்கா இரத்தினபுரி செல்லவிருக்கும் பிக்குகள் குழுவிடம் கையளித்தார்.

இம் மகஜரை சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் பெற்றுக் கொண்ட பிக்குகள் அதனை ''சமன்'' தெய்வத்திடம் ஒப்படைப்பதற்கென ஒரு வாகனம் மூலம் இரத்தினபுரி சென்றுகொண்டிருக்கின்றனர். இவர்களுடன் மேலும் பல வாகனங்கள் செல்கின்றன இவர்கள் இரத்தினபுரியிலுள்ள ''சமன்''தேவாலயத்தை மூன்று தினங்கள் பயணம் செய்து அடைவார்கள் என தெரிவிக்கப்படுகிறது கொழும்பிலிருந்து இவ் விகாரை அறுபதுமைல் தூரத்தில் உள்ளது.

இவ்வாகனம் செல்லும் வீதியின் இரு மருங்கிலும் இரத்தினபுரி வரை மக்கள் கை கோர்த்துக் கொண்டு வரிசையாக நிற்பர் என அதன் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, அரச உடைமைகளை தனியார் மயமாக்கல், அவசரகாலச் நீடிப்பு, வடக்கு கிழக்கு யுத்தம் தொடர்ந்து நீடித்தல் என்பவற்றுக்கு எதிராக இந்தப் போராட்டம் நடாத்தப் படுவதாக இதன் அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார்

இப்போராட்டத்தைத் தொடர்ந்து ''தீப் போராட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இடைவிடா மழையினால் அகதிமுகாம்களில் வெள்ளம்

[யாழ்ப்பாணம]

யாழ் குடாநாடு முழுவதும் கடந்த இரு நாட்களாக தொடர்ச்சியாக பொழியும் கடும் மழை காரணமாக அகதி முகாம்களில் தங்கியிருக்கும் ஆயிரக்கணக்கான அகதிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மக்கள் தங்கியிருக்கும் அகதி முகாம்கள் மற்றும் ஓலைக் குடிசைகள் கடும் காற்றின் காரணமாக தூக்கி வீசப் பட்டிருக்கின்றன. வேகமாக உயர்ந்துவரும் வெள்ளநீர் மட்டம் ஓலைக் குடிசைகளைச் சூழ்ந்து கொண்டதுடன் ஒருசில ஆடங்களில் குடிசைகளுக்குள்ளும் வெள்ளநீர் புகுந்துவிட்டது.

சிறிலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக தமது சொந்த இடங்களில் இருந்து இடம் பெயர்ந்த இம்மக்கள் அடைமழை காரணமாக தோன்றிய வெள்ளம் அகதி முகாம்களை ஆக்கிரமித்துக் கொண்டதால் மீண்டுமொரு தடவை இடம்பெயர்ந்து செல்லும் அவலநிலை ஏற்பட்டிருக்கிறது.

வலி. வடக்கு, வலி. தென் மேற்கு, வலி. மேற்கு மற்றும் தீ கம் ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களில் பெரும்பகுதியினர்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வடமாகாணத்தில் தொடர்ந்தும் மழை பெய்யலாம்

(கொழும்பு)

வடமாகாணத்தில் தொடர்ந்தும் மழை பெய்யும், அத்துடன் வட மாகாணத்தில் கடுமையான காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து காலி வரையிலான கரையோரக் கடற்பகுதி தொடர்ந்தும் கொந்தளிப்பாக இருப்பதோடு அவ்வப்போது பலமான மழையும் இடையிடையே காற்றும் ஏற்படும் என்று வளிமண்டல

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## திட்டமிடல் சேவை போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை திட்டமிடல் சேவையின் 2 ஆம் வகுப்பு, அல்லது பட்ட பின்படிப்பு டிப்புளோமா பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக இருப்

## இரு தினங்களாகப் பெய்த மழையால் 4 பேர் பலி; 50 பேர் காயம்

### 15,000 பேர் வீடிழப்பு

இரு தினங்களாகப் பெய்த கடும் மழையினால் இலங்கை முழுவதும் குறைந்தது நான்கு பேர் பலியாகியதாகவும், 50

தது.

இதேவேளை நேற்றுமாலை

யில் இருந்து காலிவரை கரையோரங்களில் கடும் காற்று

## இந்தியா சென்ற கப்பல் தரை தட்டியது

இந்தியாவைநோக்கிச்சென்று கொண்டிருந்தகப்பலொன்று சூறாவளி காரணமாக லுனாவை என்னும் இடத்தில் தரைதட்டியுள்ளது இதில் பயணம் செய்த சிலரைக்

மதியான எல்.பி ருசேட் என்ற இந்தக் கப்பல் இரும்புச்சழிவு பொருட்களை ஏற்றிக் கொண்டு இந்தியா நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

இலங்கை திட்டமிடல் சேவையின் 2 ஆம் வகுப்பு, தரம் 2 உதவிப் பணிப் ாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற் கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்போர் முதலாம்தரம் அல்லது இரண்டாம் தர பட்டதாரியாக அல்லது பட்ட பின்படிப்பு பட்டம் டிப்புளோமா பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக இருப்பதுடன் நவம்பர் 20 ஆம் திகதி 22 வயது முதல் 30 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக 200 ரூபா செலுத்தப்படல் வேண்டும் இக் கட்டணத்தை கச்சேரியில் செலுத்தலாம் விண்ணப்பப் படிவங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முழுவதும் குறைந்தது நான்கு பேர் பலியாகியதாகவும், 50 க்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும், 15,000பேர் வீடுகளை இழந்துள்ளதாகவும் இந்திய வானொலி தெரிவித்தது.

இதேவேளை நேற்றுமாலை சூறாவளி இலங்கையைக் கடந்துவிட்டதாகவும் எனினும் அடுத்த முப்பத்தாறு மணி நேரத்திற்கு காங்கேசன்துறை யோரங்களில் கடும்காற்று வீசும் எனவும், வடபகுதியில் தொடர்ந்து பலத்தமழைபெய்யும் எனவும் ரூபவாகினி நேற்றுமாலை அறிவித்தது.

தரைதட்டியுள்ளது இதில் பயணம் செய்த சிலரைக் காணவில்லை என்றும் 13 பேர் கரையை அடந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

30 இலட்சம் ரூபா பெறு சென்றுகொண்டிருந்தது.

புயல்பற்றிய எச்சரிக்கை கிடைத்ததும் கொழும்பு துறைமுகம் நோக்கி சென்றுகொண்டிருந்த போதே இது தரை தட்டியது.

# தொழில்நுட்பக்கல்லூரி; மார்ச்சில் இறுதி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் கடந்த இறுதியாண்டுப் பரீட்சையில் நடைபெறாத பதின்னான்கு பாடஅலகுகளுக்குமுரிய பரீட்சை எதிர்வரும் 93 ஜனவரி முதல் வாரத்திலும் 92 ஆம் ஆண்டுக்குரிய இறுதியாண்டுப் பரீட்சை 93 ஆம் ஆண்டு பங்குனி முதல் வாரமளவில் நடைபெறுவதற்கு பரீட்சையாளரால் உறுதியளிக்கப்பட்டுள்ளதாக தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் திரு. ஜெயரட்ணம் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில் இவ் வருட இறுதிக்குள் மருதானை தொழிலநுட்பக் கல்லூரியை பல்கலைக்கழக கல்லூரியாக மாற்றுவதற்கு கல்வி உயர் அதிகாரிகள் குழு மட்டத்தில் முடிவெடுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தென்னிலங்கையிலும் மழையால் பெரும் பாதிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கையில் கடந்த இரண்டு நாட்களாகப் பெய்து வரும் மழையினாலும் கடும் காற்றினாலும் பலர் உயிரிழந்துள்ளதுடன் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாகியுள்ளன.

இரத்தினபுரி நகரமும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் கடும் மழை காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன, களுத்துறையில் சுமார் ஆயிரம் வீடுகள் சூறாவளியினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கம்பஹாவிலும் சுமார் 125 வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. சூறாவளி காரணமாகப் பல வீடுகளும் சேதமடைந்துள்ளன.

தெனிலங்கையின் பல பாகங்களில் மின்சாரமும், தொலைத்தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளன. மலை நாட்டுப் பாதையில் ரயில் சேவை வழமைபோல் நடைபெறவில்லை. ரயில் பாதைகளில் மண்சரிவு ஏற்பட்டதன் காரணமாக ரயில் சேவைகள் தடைப்பட்டுள்ளன.

வடமேற்கு, ஊவா மற்றும் சப்பிரகமுவ மேற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் தொடர்ந்து மழை பெய்யும். மலைநாட்டில் மேற்குப் பகுதியிலும் மேற்குக் கரையோரப் பகுதியிலும் கடும் மழை பெய்யக் கூடிய சாத்தியம் உண்டு.

வடமேற்கு மாகாணத்தில் பலமான காற்று வீசக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

# கடலுக்குச் சென்ற 10மீனவரைக் காணவில்லை

அம்பாறையிலிருந்து சூறாவளி எச்சரிக்கை கிடைக்கமுன் மீன் பிடிக்கச்சென்ற 10 மீனவரைக் காணவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் மூன்று தினங்களுக்குமுன் மூன்று படகுகளில் மீன்பிடிக்கவென சென்றவர்கள் எனவும் இவர்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# கிழக்கு மாகாணத்தில் 3000 குடும்பங்கள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் கடந்த இரு தினங்களாக இடைவிடாது பெய்து வரும் மழையினால் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளதென்றும் பலர் பலியாகி உள்ளனர் என்றும் 3000க்குமேற்பட்ட குடும்பங்கள் வீடுகளை இழந்துள்ளார்கள் என்றும்தெரியவருகிறது.

மட்டக்களப்பு மாவட்டம் நாவலடி, முகத்துவாரம், புதுமுகத்துவாரம் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 450 குடும்பங்களைச் சேர்ந்த 1500க்கு மேற்பட்டோர் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு கல்லடி இராம கிருஷ்ணமிசன் பாடசாலையில் அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

அக்கரைப்பற்று, காரைதீவு, கல்முனை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள சுமார் 2500 க்கு மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் சூறாவளியினால் 30 பேர் காயம் அடைந்ததாகவும் ஒருவர் பலியாகியிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பேதங்களற்ற சமதர்ம பூமியாக தமிழீழம் திகழ வேண்டும்

## மாவீரர் கனவு இதுவே

தாம் வாழும் மண்ணின்விடுதலைக்காகவும், தமது சந்ததி எதிர்காலத்திலேனும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கவேண்டும் என்பதற்காகவும், தம்மையே தீயிட்டுக்கொண்டவர்கள் தாம் இந்த மாவீரர்கள்.

இவர்கள் அன்னியன் காலடி எம் மண்ணில் பதியக் கூடாது என்பதற்காக எல்லைகளில் வேலியாகி நின்றவர்கள். கண்ணை இமை காப்பது போல் கண் துயிலாது காவல் நின்றவர்கள். மலைபோல பகைவன் படை வந்தெதிர்த்த வேளைகளிலும் நிலை குலையாது நின்றெதிர்கொண்டவர்கள். இவ்வாறு மாவீரர் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிரிகளை இம் மண்ணிலிருந்து அகற்றுவது மட்டுமல்ல இவர்களின் பணி. எதிரியிடமிருந்து மீட்கப்பட்ட மண்ணானது சாதி-மத பேதங்களற்ற சமதர்மபூமியாகத் திகழவேண்டும் என்பதுவும் இவர்கள் கண்ட கனவாகும்.

சொந்த பந்தங்களையும், சுயநல எண்ணங்களையும் அறுத்தெறிந்துவிட்டு தேச நலன் ஒன்றே இலக்கெனக் கொண்டு, ஆயுதங்களைக் கையிலேந்தியவர்கள் இவர்கள். தீயில் நடந்தவர்கள். தேசத்தின் தேவைக்காக இறுதியில் தம் தேகங்களையே உரமாக்கியவர்கள்.

''தமிழனுக்கு உயிரை விட மானமே பெரிது அடிமை வாழ்வு அவமானமானது, குருதி சிந்தியேனும் விடுதலை பெறுவோம்'' என்றெல்லாம் மேடைகளில் முழங்கிக் கொண்டு, செயல்பட முடியாமல் முடங்கிக்கிடக்கும் வாய்ச்சொல் வீரர்களல்ல இந்த மாவீரர்கள். தேச விடியலுக்காக குருதி சிந்தி, அதனைச் செயல் வடிவாக்கிய தீரர்கள், தியாகிகள் இவர்கள்!

# தமிழ் குழுக்கள் உதவியுடன் புனிதயுத்தத்திற்கு தயாராம்

## -முஸ்லிம் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்க் குழுக்களின் உதவியுடன் ஜிகாத் புனித யுத்தத்தில் பங்கு கொள்ள முஸ்லிம் இளைஞர்கள் தயாராக உள்ளதாக 'அல் இஸ்லாம்' அமைப்பு அறிவித்துள்ளது.

இவ் அமைப்பு இதுதொடர் பாகவிடுத்துள்ளஅறிக்கையொன்றில் மேலும் தெரிவித்திருப்பதாவது இதுவரை எமது அமைப்பு முஸ்லிம் காங்கிரசை எதிர்த்து வந்தது. ஆனால் தற்போது முஸ்லிம்களை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக முஸ்லிம் காங்கிரசின் முஸ்லிம்களின் தனி இராணுவக் கோரிக்கையை ஆதரிக்க முன் வந்துள்ளது.

முஸ்லிம்களை தனி இராணுவ அமைப்பும், சிறிலங்கா

(4 ஆம் பக்கம் பார்க்க)


**வீடியோ படப்பிடிப்பாளர்கட்கு.....**

யாழ். மாவட்டத்தில் வீடியோ படப்பிடிப்பு செய்யும் சகலருக்குமான கூட்டமொன்று 1992 11-16 [திங்கள்] காலை 10மணிக்கு நிதர்சனம் செயலகத்தில் நடைபெறும். சகல வீடியோ படப்பிடிப்பாளர்களும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளவும்.

பொறுப்பாளர்,
**நிதர்சனம்,**
தீப் வீதி,
திருநெல்வேலி.

(3638)

## வரி விளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி 5399)

### மாணவ வழிகாட்டி

1992 கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் சாதாரண தரம் தேர்விற்குத் தோற்றும் மாணவ சமுதாயத்திற்கான வழிகாட்டி சித்திரம் (ஆண்டு 11, ஆக்கம் 'யசோ' (ஆசிரியர்—சித்திரம் வினா விடை) எங்கும் கிடைக்கும். (3616)

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

தென்மராட்சி மக்களுக்கு டில்காவின் சேவை! உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல பற்றறிகளும் எம்மிடம் உண்டு டில்கா வாச்வேக்ஸ் பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி-5400)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள C. D 50 (HONDA) மோட்டார் சயிக்கிள், ஏசியா சயிக்கிள் Gens Bicycle (Japan) உடன் விற்பனைக்குண்டு. விலாசம்: S. P. செங்காபரம் வினாசித்தம்பி வீதி, (அரசினர் ஆஸ்பத்திரிக்கு முன்பாக) சாவகச்சேரி. (3633)

### பற் சிகிச்சை நிலையம்

பற் சிகிச்சை நிலையம், (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில் கே கே எஸ் வீதி, கொக்குவில்) தினசரி; 4 பி. ப. — 6 பி. ப. ஞாயிறு; 10 மு. ப. — 2 பி. ப (3216)

### எம் ஜி. ஆர். திருமணசேவை

வெளி நாடுகளில் தொழில் புரியும் செவ்வாய்க் குற்றம் உள்ள, குற்றம் அற்ற ஆண்களுக்கு பொருத்தமான மணமகள்கள் தேவை. இலங்கையில் வந்து விவாகம் செய்யலாம். தொடர்பு: எம். ஜி. ஆர் திருமண சேவை வே. புண்ணியமூர்த்தி, புத்தூர்ச் சந்தி, மீசாலை. (3358)

### பரிசளிப்பு விழா

யா/வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைச்சாமி மத்தியமகா வித்தியாலயத்தின் 1992 ஆம் ஆண்டின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு. பொ. கேதாரநாதன் தலைமையில் நடைபெறஇருக்கின்றது.

இவ் விழாவில் பிரதம விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவும், அவரது துணைவியார் திருமதி இராஜேஸ்வரி துரைராசாவும் கலந்து கொள்கின்றனர் சிறப்பு விருந்தினராக வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கமும், கௌரவ விருந்தினராக வேலணைக் கல்விக் கோட்ட பிரதி கல்விப் பணிப்பாளர் திரு. சி புலேந்திரனும் கலந்து கொண்டு சிறப்பிக்கவிருக்கின்றனர். (14)

---

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

கிளிநொச்சிக் கிளை

## தையல் பயிற்சி நெறி

மேற்படி பயிற்சி நெறி பயிலவிரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சி இலவசமாக நடத்தப்படவுள்ளது. ஆர்வமுடையோர் தமது ஆற்றல், கல்வித்தகைமைஆகியவற்றை உறுதிப்படுத்தும் அத்தாட்சிப்பத்திரங்

---

இடம் பெயர்ந்த மக்களின்

# வாழ்வைநம்பிக்கைக்கு உரியதாக்கும் சமூகபொருளாதார வளர்ச்சித் திட்டம்

சிறிலங்கா அரசு '90 யூன் மாதம்' தமிழீழத்தின் மீது பெரும் போரைத் தொடுத்தது இராணுவ நடவடிக்கைகளுடன் கடுமையான தடைகள், அழுத்தங்கள் தமிழ் மக்களுக்கு எதிராகச் சிங்கள அரசினால் போடப்பட்டன.

இந்த நிலையில் தமிழ் மக்கள் உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையினாலும் தொடரும் இராணுவ நடவடிக்கைகளினாலும் சொந்த மண்ணில் அகதிகளாக்கப்பட்டார்கள்.

தமது சொந்த வாழிடங்களைவிட்டு விரட்டப்பட்ட மக்கள் அகதிமுகாம்களிலே வாழவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. இதனால் இவர்கள் தமது அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாதவர்களாகவே இருந்தார்கள் இதனையே சிங்கள அரசு விரும்பியது.

எதிரியின் திட்டங்களைத் தகர்த்து எறிந்து இந்த மக்களுக்கு என்று ஒரு பொருளாதார அடித்தளத்தை உருவாக்கவும், வாழ்வின் அத்தியாவசியமான அடிப்படைத் தேவைகளை உறுதிப்படுத்தவும் 'சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டம்' விடுதலைப்புலிகளால் ஆரம்பிக்கப்பட்டு இன்றைய நிலையில் மிகவேகமாகவும், திறமையாகவும் நெறிப்படுத்தப்பட்டு வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டும் வருகிறது.

இதன் மூலம் இம்மக்கள் வேதனை நிறைந்த முகாம் வாழ்க்கையில் இருந்து நகர்ந்து இந்தத் தேசத்தின் விடுதலைக்காக உறுதியோடு இறுதிவரை தாக்குப் பிடிக்கும் கொத்தணிக் குடியிருப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது.

இன்றுவரை கடந்த இரு வருட காலத்திற்குள் இவ் வேலைத்திட்டத்தின் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 51 குடியிருப்புகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 05 குடியிருப்புகளும், யாழ். மாவட்டத்தில் 10 குடியிருப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

இக்குடியிருப்புக்களில் இவ் வேலைத் திட்டத்தின் மூலம் சுமார் 7,000ற்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 35,000ற்கு மேற்பட்ட இடம் பெயர்ந்த மக்கள் பராமரிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இவ் இடம் பெயர்ந்த மக்களுக்கு என கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, விவசாயம்,

> தமிழீழ விடுதலைப் புலிகளின் சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் செயற்பாட்டு விபரங்கள் பற்றிய சிறிய அறிமுகம்.

புனர்வாழ்வு, தொழில், பொதுவிடயம் ஆகிய நிறுவன வடிவங்களின் கீழ் இவ் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

கல்வித்திட்டத்தின் கீழ் 50ற்கு மேற்பட்ட பாலர் பாடசாலைகள் 50ற்கு மேற்பட்ட கல்விவளர்ச்சிக்கழகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 05 ற்கு மேற்பட்ட பாடசாலைகளில் இடவசதியின்மை நீக்கப்பட்டு 100ற்கு மேற்பட்ட ஆசிரியர்களை நியமித்ததன் மூலம் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையும் நீக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் 1000 க்கு மேற்பட்ட பாலர்களும் 2000ற்கு மேற்பட்ட மாணவர்களும் கல்வியைத் தொடர வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதாரத் திட்டத்தின் கீழ் இம்மக்களுக்கு என 'மாவீரர் வைத்திய நிலையம்' அமைக்கப்பட்டு, சேவையாற்றுவதோடு எமது நிலையத்தொண்டர்களால் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளும், சூழல் சுகாதாரம் பேணும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இன்றுவரை 4000ற்கு மேற்பட்ட வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன தொடர்ந்து அமைக்கப்பட்டும் வருகிறது

விவசாயத் திட்டத்தின் கீழ் இன்றுவரை 500ற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு நெற்செய்கைக்கான உதவிகளும், 1500ற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு மேட்டுப்பயிர், சிறுதானியப் பயிர்ச் செய்கைக்கான உதவிகளும் 100 ற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு தோட்டப்பயிர்ச் செய்கைக்கான உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன

மேலும் 100ற்கு மேற்பட்ட குடும்பங்கள் நன்மைபெறும் 'கூட்டுப்பண்ணைகள்' முல்லை மாவட்டம் உடையார்கட்டு, முத்து ஐயன்கட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன.

விவசாயத்திட்டத்தின் கீழ் ரூபா- 25 000/- பெறுமதியான அணைக்கட்டு, கால்வாய் அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு 15 இலட்சம் ரூபா வரைபலன் அடைந்துள்ளார்கள்.

புனர்வாழ்வு நடவடிக்கைகளின் கீழ் அரச நிவாரணம் பெறாத குடும்பங்கள் உட்பட போராளிக் குடும்பங்கள், விதவைகள், அனாதைகள், ஊனமுற்றவர், பாலூட்டும், கர்ப்பிணித்தாய், குழந்தைகள், ஆசிரியர்கள், தொண்டர்கள், நோயாளிகள் என சுமார் 1000ற்கு மேற்பட்ட குடும்பங்கள் பலன் அடைகிறார்கள்.

தொழில் வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூபா- 500 முதல் 5000ரூபா பெறுமதியான சுயசார்புத் தொழிற்கடன் உதவிகள் 1000ற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 150ற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு கோழிவளர்ப்பு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 100ற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு சிறு தொழிலுக்கான கடன் இல்லாத உதவிகளும், 25ற்கு மேற்பட்டவர்களுக்கு வியாபாரத்திற்கு என

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி



வீரப்பிறப்பு
4
-
10

வீரச்சாவு
25
-
9

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்
1976-11-11
மண்ணிற்காக
1992-10-01

### வீரவேங்கை தாமரைக்கண்ணன்
(கனீஷியஸ் சதீஸ்குமார்)

சின்னத்தம்பி மகேஸ்வரன் பிறக்சீட் அம்மாள்
சிறுபிள்ளை கனீஷியஸ் சதீஸ்குமாரன்
தன் வழியிற் புலியாகித் தானை சேர்ந்து
தம்முயிரைப் பலியாக மண்ணுக்கீந்து
உன்னதமா வான் வீட்டிலேகி யின்று
உருண்டோடி நாற்பதைந்தாம் நாள்
சின்னவனை நினைந்தீசன் பரமே வேண்டச்
சிரந்தாழ்த்தி உங்களை நாம் அழைப்போம் வாரீர்

221, ஆஸ்பத்திரிவீதி
யாழ்ப்பாணம். (3630)

அப்பா, அம்மா
சகோதரர்களுடன்
பேரன், பேர்த்தி.

---

## நினைவு கூருகின்றோம் ...
## 1992-11-14

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் கூராய் ஆற்றில் எதிர்பாராத விதமாக மூழ்கியதில் எமைப் பிரிந்த

**பப்பா / பவான்** (மருசலீன் ஜெபனேசன்- பெரியபண்டிவிரிச்சான், மன்னார்)

மன்னார் - அடம்பன் ஆட்காட்டி வெளிப்பகுதியில் உலங்கு வானூர்தியில் வந்த சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**லெப். றொனி** (யோசப் சௌந்தரநாயகம்-பரப்பாங் கண்டல், மன்னார்)

1986 ஆம் ஆண்டு மட்டு - கள்ளியந் தீவுப் பகுதியில் அதிரடிப்படையினருடனான சமரின்போது சயனைட்உட்கொண்டுபின்னர்குண்டை வெடிக்கவைத்து வீரச்சாவெய்திய

**புண்ணியன்** (இருதயம் மைக்கல் கொலின் - 14/1 மத்தியவீதி, மட்டக்களப்பு)

கூனித்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையில் சுடப்பட்டு வீரச்சாவெய்திய

★ **மாதவன்/மாஸ்ரர்** (வை.மாதவராசா-எல்.பி.03 மூதூர் - திருக்கோணமலை)

றொட்டைப்பகுதியில், சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய

★ **குமார்** (கார்த்திகேசு ரவிக்குமார் - அக்கரைப்பற்று)

★ **மனோகரன் / மட்டை** (வேலுப்பிள்ளை விஜயராசா - அக்கரைப்பற்று)

முண்டியோர் தமது ஆற்றல், கல்வித்தகைமை ஆகிய வற்றை உறுதிப்படுத்தும் அத்தாட்சிப்பத்திரங் களுடன் 25.11.1992 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு எமதுபணிமனையில் நடைபெறவிருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொளகின்றோம்.

இல. 396, கண்டி வீதி,
கிளிநொச்சி.
05.11.1992

கௌரவ செயலாளர்,
கிளிநொச்சிக் கிளை
(சி-5404)

---

## 45-ம் நாள் நினைவு தினம்



வீரஜனனம்
03 - 12 - 1973

வீரச்சாவு
01 - 10 - 1992

## 2-ம் லெப். மறைச்செல்வன்

[சண்முகம் திருச்செல்வன்- (வின்சன்) ]

(01. 10. 92இல் கட்டைக்காட்டு மினிமுகாம் தகர்ப்பில் வீரசொர்க்கம் புகுந்தார்)

புலிக்கொடியால் புரட்சிப் பாதையில்
கிலி கொண்டோட எதிரியை விரட்டிய
வீரமைந்தனே வின்சா...
உன் நினைவால் வாடுகின்றோம்.
மண்ணுக்காய் மடிந்த மைந்தனே! மாவீரனே!
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சிறுப்பிட்டி.
(3618)

- குடும்பத்தினர்

---



10 - 9 - 1973

9 - 1992

## லெப்டினன்ட் தமிழேஸ்வரன்

காத்திகேசு யோகேஸ்வரன்

லெப்டினன்ட் தமிழேஸ்வரனின் 45-ம்நாள் அந்தி யேட்டி 8-11-1992 அன்று ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது.

எங்கள் இதயங்களில் என்றும் மங்காப் புகழ் படைத்த மாவீரனுக்கு நினைவஞ்சலியை செலுத்துகின்றோம்.

தல்லையப்புலம்,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.
(3403)

பெரியதாயார் குடும்பம்
சிவஞானசுந்தரம் மீனாட்சி

---


கலிகை சந்தியில் உங்கள் நண்பன் ..............
உங்கள் உற்ற துணைவனாக சேவை செய்கின்றோம்.
எம்மிடம் ஒரு முறை விஜயம் செய்யுங்கள் ..... ...
உண்மையின் இரகசியம் தெரியும்.
அன்றும் இன்றும் இனி என்றும்
உங்களுக்கு உகந்த வகையில்

நெல் குற்றியும் மிளகாய் அரைத்தும்
அரிசி தீட்டியும் உழுந்து, பயறு திரித்தும்
தூள் அரைத்தும் கொடுக்கின்றோம்.

நிதான விலையில் நம்பிக்கை நிறைந்த தொழில்
நீங்கள் நாடவேண்டிய இடம்......

V.P.S.

பரஞ்சோதி கிறைண்டிங் மில்

கலிகை சந்தி - கரவெட்டி

(சி-5405)


---

களும், 25ற்கு மேற்பட்ட வரிக ளுக்கு வியாபாரத்திற்கு என துவிச்சக்கரவண்டிகளும் வழங் கப்பட்டுள்ளன.

பொதுவிடயங்களின் கீழ் 10ற்கு மேற்பட்ட கிணறுகள் அமைக்கப்பட்டுள்ள தோடு, கிணற்றுப் பாவனைக்கான உதவிகளும், எம்மால் அமைக் கப்பட்ட 15ற்கு மேற்பட்ட விளையாட்டுக்கழகங்களுக் கான உதவிகளும் வழங்கப்பட் டுள்ளதோடு 4ற்குமேற்பட்ட அறிவாலயங்களும். 03 தையல் பயிற்சி நிலையங்களும் அமைக் கப்பட்டுள்ளன.

மேலும் இவ் அறிவாலயங்க ளிற்கான பத்திரிகைகள், நூல் கள் என்பன வழங்கப்படுவ

(3 ஆம் பக்கம் பார்க்க)

---

★ மனோகரன் / மட்டை (வேலுப்பிள்ளை விஜய ராசா - அக்கரைப்பற்று]

1987 ஆம் ஆண்டு யாழ். கொழும்புத்துறைப் பகு தியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய அரியாலைப் பிரதேச பொறுப்பாளர்

அகிலன் (கந்தையா சசிக்குமார் - சங்கானை மேற்கு, யாழ்.)

வந்தாறுமூலைப் பகுதியில் இந்தியப்படையினருட னான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய

2-ம் லெப். சுகந்தன் (முத்தர் புஸ்பராசா-கோரக் கல்லிமடு, மட்டக்களப்பு)

1988ஆம் ஆண்டு முல்லைத்தீவில் தேச விரோதிக ளினால் சுட்டுக்கொல்லப்பட்டநாட்டுப்பற்றாளர்களான

சங்கர்

கிளியன்

1989 ஆம் ஆண்டு அம்பாறை நகர்ப் பகுதியில் சிறி லங்கா காவற்றுறையினரால்சுடப்பட்டு வீரச்சாவெய்திய

ஜெயராஜா [அக்கரைப்பற்று]

பாபு [அக்கரைப்பற்று]

1990 ஆம் ஆண்டு சாவகச்சேரிப் பகுதியில் எதிர் பாராதவிதமாக ஏற்பட்ட உழவு இயந்திர விபத்தில் எமைப் பிரிந்த

கண்ணன் / செல்வம் (நாராயணசாமி செல்வக் கிருஸ்ணன் - சுழிபுரம் மத்தி, யாழ்.)

இணுவில் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில எமைப்பிரிந்த

அமலன் [செல்வராசா கேதீஸ்வரன் - கணேஸ் வீதி, ஆனைக்கோட்டை யாழ்]

மாவிட்டபுரம் - சாந்தைச் சந்தியில், காங்கேசன் துறை முகாமிலிருந்து வந்த சிறிலங்காப் படையினரு டன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய

முஸ்தபா [ரட்ணம் சந்திரசேகர் - புத்தூர் கிழக்கு, யாழ்.]

மட்டக்களப்பில் எமது முகாமில் எதிர்பாராத வித மாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த

மயூரன் [சினித்தம்பி ஜீவராஜ்-பார்வீதி,மட்டக்களப்பு

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கியகாலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவ வர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5403)

சிந்தனைக்கு

விசுவாசமில்லாத இதயம், விவேகமில்லாத தலையின் அறிகுறி. - ஜான் ஆர்ம்ராங்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 14-11-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## ரெலோவின் 'தாரைவார்ப்பு'

வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதன் அடிப்படையில் அமைந்த தீர்வுத் திட்டம் ஒன்றை 'ரெலோ' குழு முன்வைத்துள்ளது. இத்திட்டத்தின் பிரகாரம் அம்பாறை மாவட்டத்தை ஊவா மாகாணத்துடன் இணைக்கவும், கிழக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளில் உள்ள சிங்களக் குடியேற்றங்களை ஏனைய சிங்கள மாகாணங்களுடன் இணைக்கவும் இக்குழு ஆலோசனை தெரிவித்துள்ளது. இவ்வாறான ஓர் தீர்வுத்திட்டத்தின் மூலம், கிழக்கு மாகாணத்தில் ஐம்பதுகளில் இருந்த இனவிகிதாசார நிலையை உருவாக்கலாம் எனவும் அக்குழு தெரிவித்துள்ளது.

இக்குழுவின் இவ் யோசனை குறித்து தமிழ் மக்கள் எவரும் அலட்டிக் கொள்ளத்தேவையில்லை. ஏனெனில் இக்குழுவின் தீர்வுத்திட்டமும், சிங்கள அரசாங்கம் வைக்கும் தீர்வுத்திட்டமும் ஒன்றே. அத்தோடு இவர்கள் வைக்கும் தீர்வுத்திட்டங்கள் அரசாங்கத்தாலும், ஏனையவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், நிறைவேற்றப் பட்டாலும், வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களும், விடுதலைப்புலிகளும்அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுதே இது சாத்தியப்பாடான தொன்றாக அமையக் கூடும்.

ஆனால், இக்குழுக்கள் வைக்கும் திட்டங்கள் இவை தமிழரின் தேசிய இனப்போராட்டத்தையும், தாயகத்தையும் காட்டிக்கொடுப்பதில் எவ்வளவு முனைப்பாகவுள்ளன என்பதையே காட்டுகின்றன. சிறிலங்கா இராணுவத்தினருடன் இணைந்து தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பதோடு, ஆக்கிரமிப்பிற்கும் துணையாக இருந்துவந்த இக்குழுக்கள் தற்பொழுது தமிழர் தாயகத்தின் ஒரு பகுதியை தீர்வுத் திட்டம் என்ற ரீதியில் தாரை வார்க்கவும் தயாராகியுள்ளன. அதாவது பலவீனமடைந்து வரும் தமது நிலையைப் பாதுகாப்பதற்கு இத்தமிழ்க் குழுக்கள் எவ்விதமான நடவடிக்கைக்கும் தயாராகவுள்ளனர் என்பதையே இது காட்டுகின்றது.

ஆனால், இவ்வாறு தமிழர் தாயகத்தை பிரித்து வழங்கும் திட்டத்தை முதலில் அறிமுகம் செய்யும்

# காஷ்மீரைப் பிரித்துக் கொள்ள இந்தியா - பாகிஸ்தான் கூட்டுச் சதி

## சதியின் பின்னணியில் அமெரிக்கா

நீண்ட காலமாக இந்திய அரசுடன் ஏற்பட்ட அதிருப்தியும் பாகிஸ்தான் அரசுடன் ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாகக் காஷ்மீரியதீவிரவாதிகள் இன்றைய காஷ்மீர் பிரச்சினையில் காஷ்மீரிய மக்கள் இந்தியாவுடன் இல்லாமலும் பாகிஸ்தானுடன் இல்லாமலும் தபசைபத்தாமே ஆள்கின்ற சுயநிர்ணய உரிமையுள்ள மக்களாக வாழ வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

மேற்படி கோரிக்கையை காஷ்மீரிய தீவிரவாதிகளான ஜம்முகாஷ்மீர் விடுதலை முன்னணி தலைவர் (ஜே. கே. எல். எவ் அமானுல்லாக்கான் முதல் பீபசிங் பேற்தர்பார்ட்டி ஃபரூக அப்துல்லா [இந்திரா காங்கிரஸ்] ஆகியோரால் முன்வைக்கப்படுவதனைத் தொடர்ந்து இத்தீவிரவாதிகளுக்கு ஆதரவு பெருகிவிடுமானால் அதனைத் தடுப்பதற்கு ஏதுவாக காஷ்மீர் விடயத்தில் இந்தியாவினையும் பாகிஸ்தானையும் ஒரு பக்கமே சாய்த்து விடக்கூடிய முன்முயற்சிகளில் அமெரிக்கா இறங்குவதற்கான பின்னணி சூழ்நிலைகளை உருவாக்கி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் சந்தித்து பேசி முடிவுக்குகொண்டு வருவதற்கு அமெரிக்கா தூண்டக்கூடும் எனவும் கருதப்படுகிறது.

இது தொடர்பாக ஏற்கனவே அமெரிக்க அரசின் சார்பாக (அதிகாரமற்ற முறையில் ரகசியமாக) பேசுவதற்காக பேராசிரியர் ஒருவர் சில மாதங்களுக்கு முன் இந்தியா சென்றதாகவும் தெரியவந்துள்ளது.

வாஷிங்டனில் உள்ள கார்னிஜி அமைதி நிறுவனத்தில் உள்ள பேராசிரியர் ஜேம்ஸ்க்ளாட் என்பவர் அமெரிக்காவில் ஆசியா பற்றிய ஆய்வில் ஈடுபட்டிருக்கிறார். இந்த அமைப்பு அமெரிக்க அரசுக்கு ஆலோசனை தரும் நிறுவனமாகும். ஜேம்ஸ்க்ளாட் முன்பு 'ஃபார் ஈஸ்ட்டர்ன் எக்கனாமிக் ரிவ்யூ,' என்ற ஏட்டின் தெற்காசிய பகுதி நிருபராக இருந்து அநுபவம் பெற்றவர்.

க்ளாட் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் வந்து உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியதாகவும் இரு நாட்டு பிரதமர்களையும் சந்தித்ததாக கூறப்படுகிறது.

இவர் தனது நாட்டிற்கு திரும்பிச்சென்றதன் பின்னால் எழுதியுள்ள கட்டுரையில் இந்திய அரசின் காஷ்மீர் பற்றிய அணுகுமுறையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும் ஏற்கனவே பாதி காஷ்மீர் பாகிஸ்தானிடமும் மீதி தன்னிடமும் உள்ளயதார்த்தத்தைஇந்தியா ஏற்றுக் கொண்டு ஒரு சமரசத்துக்கு வர ஆயத்தமாகிவிட்டது என க்ளாட் தெரிவித்த தகவலாகும்.

இதன்படி காஷ்மீரை எப்படிப் பிரித்துக் கொள்ள வேண்டும் என சில விபரங்களும் தயாராகியுள்ளன. தற்போது போர் முடிவில் எந்தப் பகுதி யார் கட்டுப்பாட்டில் உள்ளதோ அதுவே எல்லையாக இருக்கிறது. இந்த எல்லையை அங்கீகரித்து ஏற்றுக் கொள்வது முதல் அம்சம்.

காஷ்மீரின் தென்பகுதியில் கொஞ்ச நிலத்தை பாகிஸ்தான் இந்தியாவுக்கு அளிக்கும் பதிலுக்கு வடகாஷ்மீரில் நிலத்தை இந்தியா தரும். (சீனாவுடன் பாகிஸ்தானை இணைக்கும் கேந்திர வழியை அமைக்க உதவுவதற்காக)

தற்போது சீனாவின் வசமுள்ள காஷ்மீர் பகுதியில் எதைப் பாகிஸ்தான் பெறுவது எதை சீனாவே வைத்திருப்பது என்ற விஷயங்களில் எதிர்காலத்தில் இந்தியா தலையிடாது.

காஷ்மீர் எல்லைப்பகுதி இந்தியா—பாகிஸ்தான் இருதரப்பிலும் கட்டுப்பாடின்றி மனிதர்களும், சரக்குகளும் போய்வர திறந்துவிடப்படும்.

காஷ்மீர் மாநிலத்துக்கு முழு சுயாட்சி தரப்படும். இராணுவம், வெளியுறவு தொடர்பு, நாணயம் முதலிய பொறுப்புக்கள் மட்டுமே மத்திய அரசிடம் இருக்கும்.

மேற்படி சமரசத் திட்டத்தை இந்தியா ஏற்கத் தயாராக இருப்பதாக க்ளாட் தெரிவிக்கிறார். (தன்னை அமெரிக்க அரசின் தூதர் என்று கூறுவதனை அவர் ஏற்கவில்லை).

இவ்வாறு காஷ்மீர் பிரச்சினையை தீர்த்து வைக்க அமெரிக்கா ஆர்வம் காட்டுவது ஏன்? கடந்த காலத்தில் பெருமளவு ஆயுத உதவியும் பண உதவியும் அளித்து வந்ததே அமெரிக்காதான். இவை தவிர அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபடுவதாக தெரியவந்தால் உதவியை நிறுத்தி விடுவதாக மிரட்டிய அமெரிக்கா பின்னர் உதவித் திட்டத்தின் கீழ் தர மறுத்த ஆயுதங்களையெல்லாம் பாகிஸ்தானுக்கு கொடுத்துள்ளது.

இதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகிறது உலகத்தில் அடுத்த பெரிய வட்டார மோதல் காஷ்மீரில் இந்தியா-பாகிஸ்தான் இடையே நடக்கும் ஆபத்து உள்ளது என்பது அமெரிககாவின் கணிப்பீடு. இப் பகுதியில் மோதலை ஊக்குவிப்பது தனக்கு ஆயுத பேரங்களுக்கு உதவுமென்றாலும் இன்னொரு பக்கம் அமைதியை ஏற்படுத்துவது ஜப்பானுடன் நடத்திவரும் பொருளாதார போட்டிக்குத் தேவை என்று அமெரிக்கா கருதுகிறது.

இவை தவிர மிகப் பெரிய மார்க்கெட்டாக விளங்கக் கூடிய இந்திய உபகண்டத்தில் ஜப்பானைப் பின்தள்ளிவிட்டு வேரூன்ற வசதியாக இங்கே பிராந்திய அமைதிக்கு உதவ அமெரிக்கா விரும்புகிறது என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

எனினும் சமரசத்திட்டம் எதுவுமில்லை என்றோ, உண்டு என்றோ இந்திய அரசுத் தரப்பில் இருந்து இன்னமும் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை.

இருந்தாலும் பாகிஸ்தானுடன் இந்தியா கொண்டுள்ள அணுகுமுறையில் புதிய போக்கு ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் இராணுவத் தளபதி ஜெனரல் அஸீஃப் நவாஸ் ஜான்ஜுவாலை இந்தியாவும் விஜயம் செய்யும் படி அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வாறு பாகிஸ்தானின் படைத்தலைவருக்கு இந்தியா அழைப்புத்தருவது அங்கேயுள்ள அரசியல் தலைமை மட்டுமின்றி இராணுவத் தலைமையுடனும் சுமுக உறவு தேவை என்று கருதுவதைக் காட்டுகிறது. அப்படி ஜெனரல் நவாஸ் இங்கு வருகை தந்தால் 1947க்குப் பிறகு இந்தியாவுக்கு பாகிஸ்தான் படைத் தலைவர் வருவது அதுவே முதல் முறையாகிவிடும். இதற்கு முன்பு வந்த இராணுவத் தளபதிகள் எல்லாமே தாங்களே ஜனாதிபதிகளாக இருந்தனர்.

பாகிஸ்தானில் ஜனநாயகம் ஏற்பட்டாலும் கூட அரசியலில் இராணுவத்தின்பிடி பலமானதாக உள்ள நிலையில் இருதரப்பையும் திருப்திப்படுத்த முற்படும் முயற்சியாகவே இது கருதப்படுகிறது. ஜெனரல் அஸீஃப்நவாஸ் வருவாரா என்பதுபிரதமர்நவாஸ் ஷரீப் முடிவைப் பொறுத்திருக்கிறது.

பாகிஸ்தான் இராணுவத்தின் உளவுப் பிரிவான இன்டர் சர்வீசஸ் இன்டெலிஜன்ஸ் அமைப்புக்கு அதிகாரங்கள் குறைக்கப்பட்டு அரச நிர்வாக உளவுப் பிரிவான இன்டெலிஜென்ஸ் பீரோ பலப்படுத்தப் படுகிறது. உள்நாட்டு அரசியல் உளவு வேலைஐ.எஸ் ஐ.யிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கிறது. பதினொரு உயர் அதிகாரிகள் மாற்றப்பட்டுள்ளார்கள்.

பத்தாயிரம் ஊழியர்களுடன் [பழைய] சோவியத்யூனியனின் கே. ஜி. பி இந்தியாவின் ஐ பி. இராணுவ உளவுப் பிரிவு அமைப்புக்கள் போன்றதாக இருந்த ஐ. எஸ். ஐ. இப்போது வெளிநாட்டு உளவில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

இராணுவத்தின் செல்வாக்கை எந்த அளவு பிரதமர் நவாஸ் குறைக்க முடியும் என்பது பற்றி அரசியல் ஆய்வாளர்களுக்கு சந்தேகம்தான்.

காஷ்மீர் சமரசத் திட்டத்தை இந்தியாவும் பாகிஸ்தானும் ஏற்றுக் கொண்டு பரஸ்பர விரோதத்தை குறைத்துக் கொண்டால் உடனடியாக இரு நாடுகளிலுமே உள்ள இராணுவங்களின் பலம் கணிசமாக குறைந்துவிடும். இந்திய இராணுவச் செலவுக்காக சுமார் இருபதாயிரம் கோடி ரூபாய் வருடந்தோறும் செலவிடுவது தேவையற்றதாகிவிடும்.

இப்படிப்பட்ட கனவுகள் பலிப்பதற்கு இப்போதைக்கு காஷ்மீரத்தில் சகல தரப்பிலும் குண்டுச்சத்தம் ஓய்ந்தால் தான் ஆரம்பமுயற்சிகளே சாத்தியமாகும்.

நன்றி:
யூனியர் போஸ்ட்

# ரொக்கட் தாக்குதல் நிறுத்தாவிடில் பதிலடி கொடுக்கப்படும்

## இஸ்ரேல் லெபனானுக்கு எச்சரிக்கை

(பெய்ரூட்)

இஸ்ரேலுக்கு எதிராகஇடம் பெற்றுவரும் ரொக்கெட் தாக்

கை ஒன்று இறுதிக்காலக்கெடு விதிககும் நிலையைக்கொண்டிருந்ததனைத் தொடர்ந்து

றுக்கொள்ளும்வரை பேச்சுக்களில் முன்னேற்றம்இருக்காது இஸ்ரேலியர்களால்லெபனான்

# தனியார்துறை ஊழியருக்கும் சம்பள உயர்வு வேண்டும்

— ஜோண் அமரதுங்கா

(கொழும்பு)

தொழில் ஆணையாளரும், சம்பள நிர்ணய சபையும் இணைந்து தனியார் துறையுடன் பேச்சு வார்த்தை நடாத்தித் தனியார்துறை ஊழியர்களுக்குப் போதிய

னால் திறைசேரிக்கும் பண இழப்பு பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது.

மாதாந்தம் கோடிக்கணக்கான ரூபாய்கள் திறைசேரியிடம் இருந்து பெற்று வந்த பெருந் தோட்டத்துறை நிர்

ஆனால், இவ்வாறு தமிழர் தாயகத்தை பிரித்து வழங்கும் திட்டத்தை முதலில் அறிமுகம் செய்யும் 'பெருமை' ரெலோவிற்கு உரியதல்ல. இதற்கு முன்னரே எழுபதுகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி இவ்வாறு தமிழர் தாயகத்தை பிரித்து வழங்கும் திட்டத்தை முன் வைத்தது. இதன் மூலம் திருமலை மாவட்டத்தில் சேருவாவெல என்னும் தனிச் சிங்கள தேர்தல் தொகுதி ஒன்றை உருவாக்க வழியும் செய்தது.

எழுபதுகளில் தேர்தல் தொகுதி ஏற்பாட்டு நிர்ணயக்குழு தேர்தல் தொகுதியை மீள் நிர்ணயம் செய்தபோது, திருமலையில் சிங்களப்பகுதிகளை இணைத்து ஓர் தேர்தல் தொகுதியை உருவாக்க தமிழர் விடுதலைக் கூட்டணி ஒப்புதல் அளித்தது. இதன் பிரகாரம் தமிழர் தாயகத்தின் ஒரு பகுதி சிங்கள பேரினவாத சக்திகளுக்கு தாரை வார்க்கப்பட்டதுமல்லாமல் தமிழர் தாயகம் துண்டாடப்படுவதற்கான சூழ்நிலையும் உருவாகியது.

இதேபோன்றே இன்று மீண்டும் ஒரு மாவட்டத்தை சிங்கள பேரினவாதத்திடம் தாரைவார்க்க ரெலோ குழு தயாராக நிற்கின்றது. இனவிகிதாசாரத்தைப் பேண வேண்டுமானால் அதற்குத் தாயகத்தை ஒப்படைத்தல் என்பது உலகிலேயே ரெலோ குழுவினர் அறிமுகமாக்கும் புதுமையான திட்டம். ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணை மீட்பதற்காக 'போராட்டம்' நடாத்தியதாகக் கூறிக் கொண்ட குழு ஒன்று தமது மண்ணையே ஒப்படைத்தல் என்பது பச்சைத் துரோகத்தனமாகும் உலகின் பல பகுதிகளிலும் ஒரு பிரதேசத்தின் இனவிகிதாசாரங்கள் பேணப்படுவதற்கு ஒரு காலவரம்பு குறிப்பிட்டு அதற்குப் பின்னர் குடியேறியவர்கள் வெளியேற்றப்படுவதே வழமையாககடைப்பிடிக்கும் நடவடிக்கை ஆகும்.

தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியில் வெற்றிகொள்ளலாம் என எண்ணியிருந்த சிங்கள அரசாங்கம் தற்பொழுது பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இதனால் சிங்கள இராணுவத்தின் வெற்றியில் தாம்குளிர் காயலாம் என எண்ணியிருந்த தமிழ்க்குழுக்களும் தமது நம்பிக்கையை இழந்துள்ளன. இந்நிலையில், தம்மால் இயன்றளவு எவ்வகையான காட்டிக் கொடுப்பில் ஈடுபட்டாவது தமது நிலையைப் பாதுகாக்க அவை தயாராக இருக்கின்றன. இதன் வெளிப்பாடே ரெலோவின் தாரைவார்ப்புத் திட்டமாகும்.

---

இஸ்ரேலுக்கு எதிராகஇடம் பெற்றுவரும் ரொக்கெட் தாக்குதலை லெபனான்நிறுத்தாது விட்டால் லெபனானுக்குப் பதிலடிகொடுக்கத் தாம் தயாராக உள்ளதாக வாஷிங்டனில் நடைபெறும் 9 ஆவது மத்திய கிழக்குச் சமாதானப் பேச்சில் இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இம்மாநாட்டில் இஸ்ரேலின் பிரதம பிரதிநிதி யூரிலுப்ரானி வாசித்த கடுமையான அறிக் விதிக்கும் நிலையைக்கொண்டிருந்ததனைத் தொடர்ந்து இரு தரப்பும் முப்பது நிமிட வாக்குவாதத்தில்ஈடுபட்டன

எங்கள் பகுதியில் பாதுகாப்பும் அமைதியும் இல்லாது போனால் அதேநிலை உங்களுக்கும் ஏற்படும். நீங்களும் சுமுக வாழ்க்கையை நடாத்த முடியாது என இஸ்ரேலியப் பிரதமர் தெரிவித்தார்.

இஸ்ரேல் ஓர் ஆக்கிரமிப்பு நாடு. இதை அவர்கள் ஏற்

களில் முன்னேற்றம்இருக்காது இஸ்ரேலியர்களால்லெபனான் கிராமம் தாக்கப்பட்டதன் பின்னாலேயே ரொக்கட்டுகள் பதிலுக்கு இஸ்ரேல்மீது ஏவப்பட்டதாகத் தெரிவித்தார்.

இதேவேளை இச்சண்டை இஸ்ரேலுக்கும், ஹிஸ்புல்லாவுக்கும் இடையேயானது. இதனை மாநாட்டின்மூலமோ சமாதானம், சரணாகதி மூலமோ அல்லது ஐ நாவுக்கு முறையீடுசெய்வதன மூலமோ இதனை நடாத்த முடியாது என ஹிஸ்புல்லா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நடாத்தித் தனியார்துறை ஊழியர்களுக்குப் போதிய சம்பள உயர்வு வழங்க வேண்டுமென மாகாண சபைகள் அமைச்சரும் வெளியுறவு ராஜாங்க அமைச்சருமான ஜோண் அமரதுங்க கடந்த செவ்வாயன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நட்டத்தில் இயங்கிய அரச நிறுவனங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளன. இத யிடம் இருந்து பெற்று வந்த பெருந் தோட்டத்துறை நிர்வாகங்களும் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தித் தனியார் துறையில் வேலை செய்யும் ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

---

சோமாலியாவில்

## உதவிப்பணி மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு அச்சுறுத்தல்

(சரஜெவா)

சோமாலியாவில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு உலகநாடுகள் பல முன்வந்துள்ள போதும் நிவாரணப் பணிகளை தடை செய்யும்விதத்தில் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுளளன. ஐ.நா. அதன் துருப்புக்களை நிலை நிறுத்துவதற்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சோமாலியாவுக்கு உதவும் நிவாரண அமைப்புக்கள் மொகதிஷுவில் கூடி ஆலோசனை கலந்தன.

ஐ.நா. நிறுவனங்களைச் சோந்தவர்களும் நிவாரண அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் விபத்துக்களை எதிர்நோக்கலாமென்றும் எந்நேரமும் எதிர்த்தாக்குதலுககு இரையாகலாம் எனவும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டவர் மீதான தாக்குதலகள், ஆட்கடத்தல், வாகனத்திருட்டுக்கள் என்பன இடம் பெறுவதாகவும், இவ்வாறான சம்பவங்கள் தொடருமென்றும் மொகதிஷுவில் ஐ நா. இராணுவத் தளபதியாக கடமையாற்றும் பிரிகேடியர் ஜெனரல் இம்தியாஸ் ஷாஹீன் தெரிவித்துள்ளார்.

70 இலட்சம் மக்கள்வாழும் சோமாலியாவில் மூன்றில் இரண்டு பகுதி மக்களுக்கு அவசர உணவு, உடை வசதிகள் தேவைப்படுகின்றன. ஆனால் ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியாளர்கள் இவ் உதவிகளை நிறுத்தி உணவுப் பொருட்களை கைப்பற்றிச் செல்வதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளனர்.

## தமிழக அரசின் உத்தரவுக்கு மார்க். கம்யூனிஸ்ட் கண்டனம்

(சென்னை)

ஜனதா கட்சித்தலைவர் சுப்பிரமணியம் சுவாமி முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைச் சம்பந்தப்படுத்தி குற்றச்சாட்டுத் தெரிவித்து வெளியிட்ட அறிக்கையைப் பத்திரிகைகள் பிரசுரிக்கக் கூடாது என்று மாநில அரசு பிறப்பித்த உத்தரவுக்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் நல்லசிவன் ஜனநாயக நாட்டில் எதிர்க் கட்சிகள் ஆளும் கட்சியை விமர்சிப்பது ஏற்றுக்கொள்ளப் பட்ட மரபு என்று நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## சிறுவர்கள் பிரான்ஸ் சென்றனர்

(பிரான்ஸ்)

யூகோஸ்லாவியாவின் இன வன்முறைகளினால் பாதிப்படைந்துள்ள ஆயிரம் பொஸ்னியசிறுவர்கள் கடந்த9-11-92 அன்று 17 பஸ் வண்டிகளில் பிரான்ஸ் சென்றடைந்தனர்.

பிரெஞ்சு குடும்பங்களுடன் தங்க வைக்கப்படுவதற்காக இவர்கள் பிரான்ஸ் சென்றடைந்தனர்.

ஜேர்மனியும், ஆஸ்திரியாவும் அகதிகளை அனுமதிக்குமாறு பிரான்ஸை வலியுறுத்தி வந்ததும், ஜேர்மன் இதுவரை இரண்டரை இலட்சம் மக்களை அகதிகளாக அனுமதித்ததும் குறிப்பிடத் தக்கது

## தற்கொலை

(லண்டன்)

100 க்கும் அதிகமான கொக்கேன் போதைப் பொருள்களை நைஜீரியப் பெண்ணொருவர் பிரிட்டனுக்கு கடத்த எடுத்த முயற்சி தோல்வியைத் தழுவிக் கொண்டதனால் அப் போதைப் பொருள் பைக்கெட்டுக்களை விழுங்கி தற்கொலை செய்து கொண்டார்.

விலி எறிரோபோ(வயது 38) என்பவரேதற்கொலை செய்து கொண்டவராவர்.

## சேவைக்கால பயிற்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் 1993-ம் ஆண்டில் ஆரம்ப ஆசிரியர்களாக நியமனம் பெற்றிருக்கும் ஆசிரியர்களுக்கானசேவைக்கால பயிற்சியும், செயல் அமர்வும் வரும் 14, 15, 16-ம் திகதிகளில் கிளிநொச்சி தர்மபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

முரசுமோட்டை, பரந்தன், வட்டக்கச்சி ஆகிய கொத்தணி பாடசாலைகளின் ஆசிரியர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இப்பயிற்சியில் கலந்துகொள்ளும் ஆசிரியர்கள் ஆசிரிய கைநூலுடனும் செயலமர்வுக்குரிய பொருள்களுடனும் வருகை தரும்படி ஆரம்பக் கல்வி இணைப்பாளர் திரு. பொன். சபாபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

---

வாழ்வை நம்பிக்கைக்கு

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோடு வேலை வாய்ப்புக்கென அமைக்கப்பட்ட 'சுந்தரி தையல் பயிற்சி நிலையம்' பல விதவைகளுக்கு வேலை வாய்ப்பையும் வழங்குகிறது.

மேலும் பொது விடயங்களின் கீழ் சுகாதாரத்தொண்டர் பயிற்சி நெறி, கோழிவளர்ப்பு, கால்நடைப் பயிற்சி நெறி, தையல் பயிற்சிநெறி, சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நெறி என்பனவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் கீழ் 200ற்கு மேற்பட்டோர் பலன் அடைந்துள்ளனர். மேலும் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க மெய்வன்மைப் போட்டிகள், உதைபந்தாட்டப் போட்டிகள், கரப்பந்தாட்டப் போட்டிகள் என்பனவும் நடாத்தப்பட்டுள்ளன.

இதேபோன்று மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டி, பேச்சுப் போட்டி, கவிதை, பாடல் போட்டி என்பனவும்நடாத்தப்பட்டுள்ளன.

மேலும் கலை இலக்கியங்களால் எமது போராட்டத்தை வளர்க்க முடியும் என்பதற்கேற்ப இம் மக்களால் 'காணி நிலம் வேண்டும்'. 'போராட்ட மேகங்கள்' ஆகிய கலை வடிவங்கள் உருவாக்கப்பட்டன.

சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டத்தினரின் இவ் வேலைத் திட்டங்கள் எதிரியின் திட்டமிட்ட நடவடிக்கைகளை தகர்த்து எறிந்து விட்டன.

வேதனை நிறைந்த முகாம் வாழ்க்கை மாற்றியமைக்கப்பட்டு மக்கள் குடியிருப்புத் திட்டங்களில் குடியமர்த்தப்பட்டு புதிய ாழ்க்கைக்கு அடி எடுத்து வைத்திருக்கிறார்கள்.

இழப்புக்களால்இந்த மக்கள் சோர்வடையவில்லை. இந்த மண்ணை விட்டு ஓடவில்லை. உரம்பெற்று உறுதியோடு கால் பதித்து நிமிர்ந்து நிற்கிறார்கள். தமது தேசத்தின் மீட்புக்காக அடுத்த சந்ததியினரது வாழ்வுக்காக முன்னரை விட தீவிரமாக செயற்படுகின்றார்கள்.

ஈழநாதம்

## முன்னாள் உதவிப்பரீட்சை ஆணையாளர்

# நாட்டைவிட்டு வெளியேற உயர் நீதிமன்றம் தடை

முன்னாள் உதவிப் பரீட்சை ஆணையாளர் டி.பி. நாணயக்காரநாட்டைவிட்டுவெளியேறுவதை உயர்நீதிமன்றம் தடை செய்துள்ளது

பரீட்சைத்திணைக்களத்தின் முன்னாள் உதவிஆணையாளரான திரு. நாணயக்கார மேல் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டதை அடுத்து மூன்றுவருட சிறைத் தண்டனையையும் அவருக்கு விதித்திருந்தது. எனினும் இத்தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்திருந்த அவர், உயர்நீதிமன்றத்தில் வெளிநாடு செல்வதற்காக விண்ணப்பித்திருந்தார். அவரதுவிண்ணப்பத்தை நிராகரித்த உயர்நீதிமன்றம் விசாரணைகள் முடிவடையும் வரையில் நாட்டைவிட்டு வெளியேறக்கூடாது என்று உத்தரவும் பிறப்பித்தது.

இவர்தனது உறவினர்களின் பரீட்சை முடிவுகளை மாற்றி சான்றிதழ் வழங்கியிருந்ததாக குற்றம் சாட்டப்பட்டது தெரிந்ததே.

## சுவிஸ் பிரஜைக்கு 10 ஆண்டு சிறை

(கொழும்பு)

சட்டவிரோத ஆயுதங்கள் வைத்திருந்தமைக்காக எக்கலவில் வீடொன்றில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்ட சுவிஸ் பிரஜையான அலன் கிலோர் கிறிஸ்டியனுக்கு நீர்கொழும்பு மாவட்ட மேல் நீதிமன்றம் பத்து ஆண்டுகள் கடுழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

பொலிசார் கிறிஸ்டியனைக் கைது செய்தபோது அவரிடமிருந்து 18 தன்னியக்க ரைபிள்கள், ஆறு றிவோல்வர்கள். ஒரு பிஸ்டல், 46,793 ரவைகள் மற்றும் தொடர்பு சாதனங்கள், கைவிலங்குகள் என்பன கைப்பற்றிக் கொண்டனர் என்பது தெரிந்ததே.

## வீரவேங்கை தேவகிக்கு மக்கள் இறுதி அஞ்சலி


நேற்று முன் தினம் காலை பருத்தித் துறையில் வீரச்சாவடைந்த பெண் போராளி வீரவேங்கை தேவகி (சத்தியகலா அருளன் - குரும்பசிட்டி) யின் புகழுடல் அன்றைய தினம் மாலை 3. 30 மணிக்கு மக்கள் அஞ்சலிக்காக கடற்புலிகள் வல் - கிழக்குப் பிரதேச காரியாலயத்தில் வைக்கப்பட்ட சமயம் நூற்றுக்கணக்கான பெண்கள் ஆண்கள், சிறுவர்கள் அஞ்சலியைச் செலுத்தினர்.

அங்கிருந்து புகழுடல் அன்று மாலை 4 மணிக்கு வடமராட்சிக்கு எடுத்துச்செல்லப்பட்டு நேற்று மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது பெருந்திரளான மக்கள் புகழுடலுக்கு அஞ்சலியைச் செலுத்தினர்

### தொழில்

கப்பட்டுள்ளதாகவும்இவ்வாறு மாற்றப்படுமேயானால் அதனைத் தொடர்ந்து யாழ். தொழில்நுட்பக் கல்லூரியும் பல்கலைக்கழக கல்லூரியாக மாற்றப்பட்டுயாழ் பல்கலைக்கழக மாணவர்கள் பெறுகின்ற சலுகைகள் இவர்களுக்கும் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். [07]

## 45-ம்நாள் நினைவலைகள்



## ஓய்வூதியம்பெறுவோருக்கும் 30 வீத உயர்வு தேவை

- தர்மசிறி

[கொழும்பு]

அரசாங்க மற்றும் உள்ளூராட்சி ஊழியர்களுக்கு வழங்கப்படும் 30 சதவீத சம்பள உயர்வு போன்று ஓய்வூதியக்காரர்களுக்கும் ஓய்வூதியத்தில் 30 சதவீத அதிகரிப்பு செய்யப்பட வேண்டும் என கேகாலை மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம்.பியான தர்மசிறி சேனநாயக்கா கடந்த செவ்வாய்கிழமை பாராளுமன்றில் தெரிவித்தார்.

அரசாங்க ஊழியருக்கு 30 சதவீத சம்பள உயர்வு வழங்கப்படும் அதேவேளை ஓய்வூதியம் பெறுவோருக்கு 300 ரூபா மட்டுமே சம்பள உயர்வாக வழங்கப்படுவதைக் கண்டித்து அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே 19 வயது பிரிவினருக்கான உதைபந்தாட்ட அரையிறுதிப்போட்டி இன்று மாலை 3. 00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரியை எதிர்த்து யாழ் ஸ்கந்தவரோதயா கல்லூரி மோதவுள்ளது.

## கல்விக் கருத்தரங்கு

அரியாலை இந்திரன் கல்வி வளர்ச்சிக் கழகத்தினர் நடாத்தும் க.பொ.த.(சாதாரண) வகுப்பு மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதிவரை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் பிற்பகல் 3. 30 மணிக்கு நடைபெறவுள்ளது

இக்கருத்தரங்கில் கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகவியல், சமயம் ஆகிய பாடங்கள் இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவ அமைப்பு தெரிவித்துள்ளது.

### திட்டமிட

களை பரீட்சை ஆணையாளர் பரீட்சைத் திணைக்களம், மலேவீதி, கொழும்பு-2 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இவர்களுக்கான பரீட்சை அடுத்த வருடம் தைமாதத்தில் கொழும்பில் நடைபெறவுள்ளன.

விண்ணப்பதாரிகள் தமக்குத் தேவையான விண்ணப்பப்படிவங்களை யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என யாழ் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றம் அறிவித்துள்ளது. [ச]

## இருபதுரூபாபெறுமதியான புதிய நோட்டு வெளியீடு

புதிய அமைப்பைக்கொண்ட இருபது ரூபா நோட்டுக்களைக் கடந்த பத்தாம் திகதிமுதல் இலங்கை மத்தியவங்கி புழக்கத்தில் விட்டுள்ளது.

129 மி. மீ. நீளமும் 64 மி மீற்றர் அகலமும் கொண்ட இப்புதிய நோட்டுக்கள் பழைய நோட்டுகளுடன் புழக்கத்தில் இருக்கும் எனவும், பழைய நோட்டுக்களை விட அளவில் சிறியதாக இருக்கும் எனவும் மத்தியவங்கி மேலும் கூறியுள்ளது. ஊதா நிறத்தையுடைய இப்புதிய நோட்டுக்களில் 01 - 01 - 1991 என்று திகதியிடப்பட்டிருப்தோடு பிரதமர் டி. பி. விஜயதுங்க மற்றும் மத்திய வங்கி ஆளுநர் எச். என். எஸ். கருணாதிலகவும் கையெழுத்திட்டுள்ளனர். இந்தப் புதிய நோட்டுக்களில் சிங்கள கலாசார பாரம்பரியத்தை புலப்படுத்தும் பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றிருப்பதோடு, சிங்க இலச்சினையும் இடம் பெற்றுள்ளது

### தமிழ்

இராணுவமும் இணைந்தே காப்பாற்ற முடியும். இதற்கு சார்பாக ஏனைய தமிழ்க் குழுக்களின் உதவியையும் நாம் பெறமுடியும்.

முஸ்லிம்கள் பிளவுபட்டிருப்பது விடுதலைப்புலிகளுக்கே சாதகமாக அமையும். எனவே நாம் ஐக்கியப்பட்டு எமது முஸ்லிம் மக்களைக் காக்க வேண்டும். இதனை ஓர் புனித யுத்தமாகக் கருதிநாம்ஆயுதம் ஏந்த தயாராக உள்ளோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாய் கடித்து மரணம்

நெல்லியடிப் பகுதியில் நாய் கடித்த ஒரு பெண்மணி ஆறு மாதங்களின் பின்னர் மரணமானார்.

இச்சம்பவம் கீரிப்பல்லி கலட்டி என்ற பிரிவில் கடந்த வாரம் நடைபெற்றது. திருமதி தமையா - அன்னப்பிள்ளை (வயது 78) என்ற பெண்மணிக்கு நாய் கடித்ததாகவும் இவர் அதற்குரிய தடுப்பூசி ஏற்ற மறந்து விட்டதினால் ஆறு மாதத்தின் பின்னர் வலி ஏற்பட்டு மரணமானதாகவும் தெரிய வருகிறது.

## குழந்தை பலி

மூளைக் காய்ச்சலால் 6 மாத ஆண் குழந்தை பலியானது. திருச்சிலுவை சுகநல சேவை நிலையத்தில் சிகிச்சை பெற்றுவந்த மேற்படிகுழந்தை நேற்று பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### வடமாகாணத்தில்

வியல் திணைக்களத்தின் வானிலை அறிக்கைகூறுகின்றது

36 மணி நேரத்திற்கு மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று மீனவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளார்கள்.

### பிரேமா

டம்'' உட்பட பல்வேறு போராட்டங்கள் மக்களை ஒன்றிணைத்து தாம் நடாத்த இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை இப்போராட்டத்தை ஆரம்பித்து வைக்க அநுரா பண்டாரநாயக்க சிறிமாவுடன் கூடவே வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

### மாவீரர்களே !

உங்களின் நினைவுடன் தலைவன்
தலைவனின் வழியினில் புலிகள்
புலிகளின் பக்கமே மக்கள்
மக்களே விடுதலைப் புலிகள்

(மாவீரர் நாள்-1992 சுவரொட்டிகள் பதாதை வசனங்கள்)

## காணிப்பதிவுமூலப்பிரதிகள் அழிந்து போகும் நிலை

(வடமராட்சி)

பருத்தித்துறைகாணிப்பதிவு அலுவலகத்தில் இருந்து வரும் தமிழர் பாரம்பரியமான காணி சம்பந்தமான வடமராட்சி பிரதேச மக்களின் மூலப்பிரதிகள் மழையினால் அழிந்து போகும் ஆபத்து நிலையில் உள்ளது.

இது சம்பந்தமாக உயர் அதிகாரியிடம் அலுவலக அதிகாரி சுட்டிக்காட்டிய போதிலும் இவ்வலுவலகம் தனியார் வீட்டில் செயற்படுவதால் இதனைக் திருத்த அமைச்சு அதிகாரிகள் பணம் ஒதுக்க தயக்கம் காட்டி வருகின்றனர்எனதெரியவருகிறது

அழிந்து போகும் இம் மூலப்பிரதிகள் பாரம்பரியங்களை பாதுகாக்க நொத்தாரிசு போன்றோர் முயற்சித்தால் ஓரளவு தடுக்கலாமென மக்கள் கருதுகின்றனர் இருந்தும் இவ்வலுவலக அதிகாரி, ஊழியர்கள் எடுத்த பலத்த முயற்சியால் ஒரு பகுதி பாதுகாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நீண்ட பல வருடங்களாக இந் நிலை நீடித்து வருகிறது. (யோ)

### இடைவிடாது

மானிப்பாய், நவாலி, கட்டுடை, ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் அகதிகள் முகாம்களிலும், பாடசாலைகளிலும் வசித்து வருகின்றனர் இதேபோன்று குடாநாட்டின் ஏனைய பல பகுதிகளிலும் அகதி முகாம்கள் அமைக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

இம்மக்களுக்கு தேவையான அளவு மலசலகூடங்கள் இதுவரை கட்டிக் கொடுக்கப்படவில்லை. திறந்தவெளித்திடல்களே இவர்களது மலசலகூடங்கள். இந்தப் பகுதிகளில் உள்ள கட்டுக்கள் எதுவும் அற்ற கிணறுகளே இவர்களது நீர்த்தேவைக்குப் பயன்படுததப்பட்டு வந்தது. திடீர் மழை காரணமாக மலங்களிக்கும் திறந்த வெளித் திடல்களும் குடிநீர் கிணறுகளும் வெள்ளநீரினால் இணைக்கப்பட்டிருக்கிறது. இதனால்இம்மக்கள்தமதுநீர்த் தேவைக்கென நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது இதனால் இப்பகுதிகளில் தொற்று நோய் பரவுவதற்கு வாய்ப்புக்கள் தோன்றியுள்ளது

மேற்படி பகுதிகளில் உள்ள அகதி முகாம்களுக்குள் வெள்ளம் சென்றதால் கடந்த இரு நாட்களாக இங்கு தங்கியிருக்கும் மக்கள் உணவு சமைக்கவோ அல்லது நிம்மதியாக உறங்கவோ முடியாத நிலை தோன்றியிருக்கிறது.

இதே போன்று மேலும் சில நாட்கள் மழை தொடர்ச்சியாகப் பெய்யுமானால் அகதி முகாம்களில தங்கியிருக்கும் மக்களின் நிலை மேலும் மோசமடையும் சந்தர்ப்பம் உள்ளது.

இவற்றை விட குடாநாட்டின் வேறும் சில பகுதிகளில் கடும் காற்றும் மழையும் காரணமாக பனை, தென்னை போன்ற உயர்ந்த மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

## 45-ம் நாள் நினைவஞ்சலி

| வீரஜனனம்: | வீரச்சாவு |
|---|---|
| 26 | 01 |
| – | – |
| 11 | 10 |



அறிவித்துள்ளது. [ச] வீதி.



## 2-ம் லெப்டினன்ட் மோகன்

(செல்வநாயகம் யதீஸ்வரன்) (யதி)

வீர ஜனனம் 03-03-1970 | வீரச்சாவு 01-10-1992

யதி!
உன்னை இப்படித்தான் நாம் அழைப்பது வழக்கம்
கிட்டியடித்து ஒன்றாக விளையாடியதும்,
கிண்டல்கள் பண்ணி உன்னை நாமும்
எம்மை நீயும் மகிழ்வித்ததும்
மறக்கமுடியாத நிகழ்வுகள்.
எமது கிராமத்தை உனது சைக்கிள்
ஓர் நாளில் ஓராயிரம் தரம் சுற்றிவரும்
இப்போதும் வெட்டிவெட்டி ஓடும்
சைக்கிள்களில் உன்னைத் தான்
எம்மக்கள் தேடுகிறார்கள்.
திருவிழாக்களில் வேட்டி சால்வையோடு
நீ முன்னின்று செய்யும் கடமைகளை
எண்ணிப் பார்க்கிறோம்.
உனது இழப்பை எம்மால் ஜீரணிக்க
முடியவில்லை நண்பனே முடியவில்லை.
எம் மக்கள் மட்டுமல்ல எமது கிராமமே
உன்னை இழந்து முகாரி இசைக்கிறது
உனது இழப்பை மறக்க முயற்சித்து
தோல்விகளைத் துணையாக்குகிறோம்.
என்றாலும் மோகனே உன் இலட்சிய
பயணம் நிச்சயம் நிறைவேறும்
வெற்றியின் விளிம்பினில் வீரனே துயில்கொள்.

- ரஞ்சித் விளையாட்டுக்கழகம்

படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில். (3637)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை அமலன்

(செல்வராசா கேதீஸ்வரன்)

வீரஜனனம் 14-06.1971 | வீரச்சாவு 14.11.1990

ஆண்டு இரண்டு ஆன பின்னும்
ஆறவில்லை எம்துயரம்:
காண்பதெப்போ? காண்பதெப்போ?
கண்ணில் நீர் ஓயவில்லை
மாண்டுவிட்ட மாவீரா!
மறக்குலத்தின் தவப்புதல்வா,
மீண்டும் இங்கு பிறந்து நீ வா,
மேன்மையுடன் தமிழீழம்
தோன்றுகையில் அமலா நீ
தோழருடன் கூட நிற்பாய்!

கணேஸ் வீதி,
ஆனைக்கோட்டை.

- ஆனைக்கோட்டை
நண்பர்கள்

(3641)

வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

மலேரியாவின் கால பகுதியாக வருடத்தில் இறுதி மூன்று மாதம் கருதப்படுவதினால் இம்மூன்றுமாதத்தில் இத்தொகை இரட்டிப்பாகும். என எதிர்பார்க்கப்படுகிறது.

பருத்தித் துறையிலேயே மலேரியாவின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. சென்ற வருடம் முழுவதும் 1871 மலேரியா நோயாளரும் இதில் மூளை மலேரியா நோயாளர் 227 பேரும் கண்டு பிடிக்கப்பட்டனர். ஆனால் இவ் வருட மலேரியா பருவ காலத்தின் முன்னரே 2800 மலேரியா நோயாளரும் 387 மூளை மலேரிய நோயாளரும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரிப்பகுதியில் 1474 மலேரிய நோயாளர் சென்ற வருடம் கண்டு பிடிக்கப்பட்டனர். மூளை மலேரியாநோயில் 74 பேரும் பாதிக்கப்பட்டனர் இவ்வருடம்செப்டெம்பர்மாத கால பகுதியில் இது வரை சுமார் 1578மலேரியா நோயாளரும், 88 மூளை மலேரியா நோயாளரும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு பகுதியிலும் மலேரியாவினால் அதிகமானவர்கள் பாதிக்கப்படுகின்றனர். மலேரியாவின் தாக்கத்தைக் குறைக்கும் நோக்குடன் வருகின்ற கிழமை நடுப்பகுதி தொடக்கம் மலேரிய''வில்லை''வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது. இதற்கு சுகாதார உத்தியோகத்தர்கள். சமூக நலன் விரும்பிகளின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் என தாம் எதிர் பார்ப்பதாக அவ் அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை மலேரியா தடுப்பிற்கு பயன் படுத்தப்படும் மலத்தியோன் எனும் மருந்தை கப்பலில் ஏற்றிவர சம்பந்தப்பட்டோர் மறுப்பதால் அம் மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதாக தெரியவருகிறது.

11 – 1975 | 10 – 1992



## வீரவேங்கை குயிலன்

(ஜெயராசா ஜெயரேபன்)

குரும்பசிட்டி — தெல்லிப்பழை

செந்தமிழ் ஈழத் திருநாட்டில் — எம்
தானைத் தலைவன் அண்ணனின் பாதையில் — எம்
இளம்புலி வீரன் குயிலன்
செங்களம் ஆடியே
வீறநடை போட்டான்
சிங்கள இராணுவ அரக்கருடன்
ஆனையிறவு முகாமினில் நேரடி மோதலின் போது
வீரச்சாவு அடைந்திட்டான்
குயிலா! உன்
கனவுகள் நனவாகும் நாள்
வெகு தொலைவில் இல்லை,

இன்று (14-11-92) இவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்வில் உற்றார். உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சங்கத்தானை,
சாவகச்சேரி.

- குடும்பத்தினர்
(3639)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 13-11-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 6646

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
24-8429, 42-0266, 24-6979, 27-7537, 22-8835, 27-2016, 26-3068.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-
26-5814, 24-6154, 27-1939, 26-5281, 40-5325, 22-6746 26-1169, 28-8367, 24-6639, 24-5418, 41-9995, 24-4249, 22-3611, 24-4295, 27-5863.